DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Miscellaneous | : | **DVC.No.5/2025** |
| Deposition of witness for | : | **ம.சா. 1** |
| Name | : | **சுகந்தி ரோஸ்லின்** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance w உ ith the provisions of Act X of 1873 of the 29th day October of 2025

**குறுக்கு விசாரணை :–**

1. நான் Master of Music படித்துள்ளேன். நான் திருமணத்திற்கு முன்பு கே.வி.எஸ் பள்ளியில் வேலை பார்த்து வந்தேன். அப்போது ரூ.16,000/– சம்பளமாக பெற்றேன். நான் திருமணத்திற்கு பின்பு வேலை செய்யவில்லை. நான் திருமணத்திற்கு பின்பு நான் வேலை பார்த்து வந்தேன் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தகவல் சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமணம் முடிந்து எதிர்மனுதாருடன் சுமார் 2 மாதங்கள் சேர்ந்து ஒரே வீட்டில் இருந்து வந்தேன். அதற்கு பிறகு மே மாதத்தில் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் பெந்தேகோஸ்தே பிரிவு படி கடவுளை வணங்கி வருகிறேன். எனது திருமணம் பெந்தேகோஸ்தே திருமண முறைப்படி தான் நடந்தது என்றால்

சரிதான். எனக்கு இரண்டு சகோதரிகள் உள்ளார்கள். மூத்த சகோதரி பெயர் எஸ்தர்ராணி, மற்றொருவர் பெயர் ஜெபகிருபாரூபி ஆவார்கள். 11.01.2019 அன்று என் அக்காவிற்கு திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் அக்காவின் திருமணம் பெந்தேகோஸ்தே சபையில் முறைப்படி திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். பாஸ்டர். ராஜன் என்பவர் தான் என் அக்காவின் திருமணத்தை நடத்தி வைத்தார் என்றால் சரிதான். பாஸ்டர்.ராஜன் என்பவர் எங்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் நேரடி பழக்கம் இல்லை என்றால் சரிதான். பாஸ்டர்.ராஜன் என்பவர் எதிர்மனுதாரின் மூலமாக எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரின் தந்தை மூலமாக தெரியும். அந்த திருமணத்தில் எதிர்மனுதாரும் எதிர்மனுதாரின் குடும்பத்தாரும் கலந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. எனக்கு எதிர்மனுதாரை 2017 ஆண்டிலிருந்து நட்பு ரீதியாக தெரியும் என்றால் சரிதான். 2017 லிருந்து எதிர்மனுதாரையும் எதிர்மனுதாரர் குடும்பத்தாரையும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரையும் எதிர்மனுதாரர் குடும்பத்தாரையும் நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்காவின் திருமணத்தை எதிர்மனுதாரும் எதிர்மனுதாரின் குடும்பத்தாரும் நடத்தி வைத்தார்கள் என்றால் சரியல்ல. நான் மதுரையில் குடியிருந்துவிட்டு காரியாபட்டி வந்தபிறகு தான் எதிர்மனுதாரர் மீது புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் முதலில் அளித்த புகாரில் எனது பண்டபாத்திரங்கள் மற்றும் சீதனபொருட்களை மட்டும் தான் கேட்டேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எதிர்மனுதாரோ அவரின் பெற்றோரோ என்னை கொடுமைப்படுத்தியதாக கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த ஆவணம் தான். நான் அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனுவின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரை விசாரித்து போலிசார் ரசீது மனு அளித்துள்ளார் என்றால் சரிதான். 3. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த ஆவணம் தான். அந்த ரசீது மனு

சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரின்படி என்னுடைய சீதனபொருட்களும் பண்டபாத்திரங்களும் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த பொருட்களை நான் பெற்றுவிட்டதாக காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கையெழுத்து செய்து பெற்றுக்கொண்ட ஆவணம் என்றால் சரிதான். நான் பொருட்களை பெற்று கொண்டு கையொப்பம் செய்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு ஆண் குழந்தை 13.11.2019 அன்று பிறந்தது. குழந்தை பிறப்பதற்கு முன்பு தான் நான் பொருட்களை கேட்டு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. நான் எதிர்மனுதார் மீது ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தாக்கல் செய்த ஜீவனாம்சம் மனு தான். மனுதாரர் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்த மனு எம்.சி எண்.18/2021 –ன் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மனுவில் எதிர்மனுதாரர் முகவரி அரசடியில் வசிப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கை நான் முழுமையாக நடத்தவில்லை என்றாலும் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றாலும் சரிதான். அந்த வழக்கில் நான் வாய்தாவிற்கு தொடர்ந்து வராததால் தான் வழக்கு தள்ளுபடியானது என்றால் சரியல்ல. நான் வாய்தாவிற்கு சென்றேன். எம்.சி எண்.18/2021ல் நீதிமன்ற அளித்த உத்தரவின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வேலை பார்த்த காரணத்தினால் நான் வாய்தாவிற்கு செல்லாமல் மனு தள்ளுபடியானது என்றால் சரியல்ல. கடந்த 14.07.2020 அன்று எதிர்மனுதாரர் ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றும் அதை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் அதை பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்கு எதிர்மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் அறிவிப்பை பெற்றுக்கொண்டு எதிர்மனுதாருக்கு வேண்டுமென்றே தான் பதில் அறிவிப்பு தரவில்லை என்றால் சரியல்ல. நான் அளித்த புகார் மனுவில்

எதிர்மனுதாரின் முகவரி டோக் நகர், மதுரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முகவரியில் தான் எதிர்மனுதாரும் அவரின் குடும்பத்தாரும் இன்று வரை வசித்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தற்போது தெரிந்து கொண்டே நான் எதிர்மனுதாரும் அவரின் குடும்பத்தாரும் வேறு முகவரியில் வசித்து வருவது போல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. நான் எதிர்மனுதாரர் மீது விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன் என்றால் சரியல்ல. நான் மீண்டும் 14.10.2020 அன்று அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது நான் அருப்புக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் அளித்த புகார் மனு என்றால் சரிதான். அந்த புகார் மனு **எ.ம.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்த மனு எம்.சி எண்.18/2021 வில் எதிர்மனுதாரர் 15 பவுன் நகையும், வீட்டிற்கு தேவையான பொருட்களையும் கொடுத்துவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது திருமணத்தின்போது 15 பவுன் நகையை அணிந்திருந்தேன் என்றால் சரியல்ல. எனது திருமணம் சர்ஸ்சில் தான் நடந்தது என்றால் சரிதான். ஆரபாளையத்தில் இருக்கும் மாஸ்டர் மகாலில் ரிசப்பசன் வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த செலவுகளை எதிர்மனுதாரின் குடும்பத்தாரர்கள் பாத்துகொண்டார்கள் என்றால் சரியல்ல, சரிசமமாக காசை கொடுத்தோம். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அந்த செலவுகளை எதிர்மனுதாரின் குடும்பத்தாரர்கள் பாத்துகொண்டார்கள் என்றாலும் சரியல்ல.

5. எதிர்மனுதாரும் அவரின் பெற்றோர்கள் என்னை கொடுமைப்படுத்தியதாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் ரோசினி என்ற பெண்ணுடன் பழகி வருவது எனக்கு நேரடியாக தெரியுமா

என்றால் தெரியும். எனது கணவர் அவரது அழைப்பேசியில் ரோசினி என்ற பெண்ணுடன் தவறான வீடியோக்களையும் டெக்ஸ்களையும் அனுப்பி வந்தார். **(மனுதாரர் கண்ணீருடன் மேலே சொன்ன பதிலை கூறினார்)**

(எதிர்மனுதாரர் வழக்கறிஞர் கோரிக்கையை ஏற்று குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒருதேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)